## சாட்சியின் வாக்குமூலம்

## திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

**Trust OS No. : 458 / 2024**

**PW1 – திரு. ஜடராயன்  த/பெ. செங்காலகிருஷ்ணன்**

**11/09/2025**

சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**நேரம் 13.05 மணி**

பிராதில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். அறக்கட்டளைக்கு தற்போது என்ன பெயரில் உள்ளது என்றால் Maligai Merchart Association Trust என்ற பெயரில் உள்ளது. மேற்படி அறக்கட்டளை எப்போது நிறுவப்பட்டது என்றால் 2011ஆம் வருடத்தில் நிறுவப்பட்டது. அறக்கட்டளையை நிறுவியது யார் என்றால் என்னுடன் சேர்ந்த்து மொத்தம் 7 பேர். ஜடராயன், கிருஷ்மூர்த்தி, பொன்னுரங்கம், பாலாஜி மற்றவர்கள் பெயர் தற்போது ஞாபகமில்லை. தற்போது அதில் 2 பேர் இறந்துவிட்டார்கள். மேற்படி அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது 2011 ஆம் வருடம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளையில் வரவு செலவு கணக்குகளுக்கு வருமான வரி தாக்கல் செய்கிறோமா என்றால் வருமான வரி தாக்கல் செய்யவில்லை. எங்களது வரவு செலவுகளை அறங்காவலர்களுக்குள்ளேயே பார்த்துக்கொள்கிறோம். எங்கள் அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் என்னென்ன என்பது குறித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த அறக்கட்டளை நிறுவப்படுவதற்கு முன்பதாக என்னவாக இருந்தது என்றால் பதினெட்டு கடை மளிகை வர்த்தகர்கள் என்று இருந்தது. அவ்வாறு இருந்ததற்கான விவரங்களை நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இந்த வழக்கில் குறிப்பிடவில்லை. பதினெட்டு

கடை மளிகை வர்த்தகர்கள் எந்த வருடம் நிறுவப்பட்டது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அது குறித்த விவரம் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். அதை யார் தொடங்கினார்கள் என்ற விவரமும் இல்லை என்றால் சரிதான். ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கடை உரிமையாளர்கள் கோவிலில் உற்சவம் செய்வார்கள். 2014ஆம் வருடத்திற்கு முன்பதாக பதினெட்டு கடை மளிகை வர்த்தகர்கள் உற்சவம் செய்த வரவு, செலவு கணக்குகள் உள்ளதா என்றால் குடோனில் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. Maligai Merchart Association Trust–ல் 7 அறங்காவலர்கள் யார் நியமனம் செய்தது என்றால் கடைக்காரர்களே Minutes Book–ல் எழுதிவிட்டு 7 நபர்களை தேர்ந்தெடுத்து அதிகாரம் கொடுத்தார்கள். அந்த Minutes Book–ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கடைக்கார்கள் தான் Minutes Book–ல் எழுதி அறங்காவலர்களை தேர்வு செய்தார்கள் என்ற விவரம் இந்த வழக்கின் பிராதில் கூறப்படவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**நேரம் 13.20 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.